# இலக்கியத் திறனாய்வு

## மதிப்புரை – திறனாய்வு – ஆராய்ச்சி - விளக்கம்

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை

07.08.2020

# மதிப்புரை – திறனாய்வு – ஆராய்ச்சி - விளக்கம்

| | |
|---|---|
| Review | - மதிப்புரை |
| Criticism | - திறனாய்வு |
| Research | - ஆராய்ச்சி |

# மதிப்புரை /திறனாய்வு/ஆராய்ச்சி

**Review**

மதிப்புரை
நூல் மதிப்பாய்வு
நூல்நிறை
நூல்கள் அறிமுகம்
ஆய்வுரை
மதிப்பாய்வுரை
புத்தக விமர்சனம்

**Criticism**

ஆராய்ச்சி
விமர்சனம்
குணதோஷ விளக்கம்
இரசனை
திறனாய்வு
நூல் நலம்
ஆராய்ச்சி விளக்கம்
இலக்கியத் திறனாய்வு விளக்கம்
ஆராய்ச்சி விமர்சன இலக்கியம்
மதிப்பீடு
பரிசோதனை

**Research**

ஆய்வு
ஆய்வுரை
ஆராய்ச்சி

# Criticism - திறனாய்வு

→ 1948 – அ.ச. ஞானசம்பந்தன் – சிலப்பதிகார ரசனை – அணிந்துரை – "இலக்கியத் திறனாய்வு"
- தனது "இலக்கியக் கலை" நூலிலும் பயன்படுத்தினார்

→ மு. வரதராசனார் – விமர்சனம், "இலக்கியத் திறனாய்வு"

→ "திறனாய்வு" – திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில். (குறள். 644)

→ ஜி. சுப்பிரமணியபிள்ளை

1. விமர்சனம் என்பது வடமொழிச்சொல். விமர்சனம் என்ற வடமொழிச்சொல்லுக்குத் தமிழில் ஆராய்ச்சி என்றுதான் பொருள்.
2. இலக்கிய விமர்சனம் என்பதற்கு 'நூலின் திறனாய்ந்து தெளிதல்' என்று பொருள் கொள்ளலாம்.

# Research - ஆராய்ச்சி

→ தொல்காப்பியத்திலேயே ஆராய்ச்சி என்ற சொல் பயின்று வருகிறது.

---

நிலைபெற்ற சொற்கள்

Review - மதிப்புரை

Criticism - திறனாய்வு

Research - ஆராய்ச்சி

# மதிப்புரையும் திறனாய்வும் - வேறுபாடுகள்

1. பொதுமக்களை நோக்கி இதழ்களில் எழுதுவது.
2. நோக்கம் - அறிமுகப்படுத்துவது.
3. இலக்கியப்படைப்பாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை.
4. வணிக அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்புடையது.

வரையறை

புதிதாக வந்திருக்கும் அல்லது சில நாட்களுக்கு முன்பு வந்திருக்கும் புத்தகங்கள் பற்றிய ஒரு பொதுவான கணிப்பு அல்லது திறனாய்வு; அது, பெரும்பாலும் பருவ இதழ்களில் அல்லது நாளிதழ்களில் வெளிவரும். – அகரமுதலி.

1. கலை இலக்கியங்களுக்கே உரிய தனித்துறை.
2. கட்டுரையாக சிற்றிதழ்களில் வருவது.
3. இலக்கியத்தரம், பன்முகத்தன்மைகளை வெளிப்படுத்துவது. புலமை வாய்ந்தவர்களிடையே இயக்கம் கொண்டிருப்பது.
4. கலைத்தன்மையுடையது. அறிவியல் குணமும்.

வரையறை

கலை, இலக்கியங்களைப் பகுத்தாய்ந்து, அவற்றின் தன்மைகளை மதிப்பிட்டு, தீர்ப்பளிக்கின்ற ஒரு செயற்பாடு அல்லது கலை. – அகரமுதலி.

# ஆராய்ச்சியும் திறனாய்வும் - வேறுபாடுகள்

| | |
|---|---|
| 1. திட்டவட்டமான ஓர் நெறிமுறை (Methodology) கடைப்பிடிக்கப்படுகிறது. தனித்த புறவடிவம் உண்டு. | 1. இத்தகைய ஒழுங்குகளை அமைத்துக்கொள்ள இயலாது. |
| 2. மதிப்புரை போல எந்த நூலைப்பற்றியும் ஆராயலாம். | 2. இலக்கியங்களைப் பற்றி மட்டுமே ஆராய்கின்ற தனித்துறையாகும். |
| 3. உண்மைக்கு முதலிடம் தருகிறது. | 3. இலக்கியத்துக்கு முதலிடம் தருகிறது. |
| 4. ஏதாவது ஒரு சிக்கலை எடுத்துக்கொண்டு தேடுகிறார். | 4. படைப்பை வாசகனுக்குக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டது. |

## வரையறை

ஏதாவது ஒன்றில் புதிதாக ஒன்றைக் கண்டுபிடிப்பதாகவோ, இருக்கின்ற உண்மைகளை மறுத்துக் கோட்பாடுகளைத் திருத்துவதாகவோ, ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கு உட்பட்டு ஆராய்ச்சி செய்வது . – அகரமுதலி.

# ஆராய்ச்சியும் திறனாய்வும் - வேறுபாடுகள்

1. இது இப்படி இப்படி இருக்கிறது என்று புட்டு வைப்பது.
2. பட்டியல் இடுவது, பாகுபாடுகள் செய்வது.
3. பாகம் குறித்தும் பெயர் எழுதுவது.

1. இது இப்படி இருக்கிறது. இப்படி இருப்பதற்கு இதுதான் காரணம்.
2. இது இப்படி இருந்திருக்கலாம் அல்லது இருக்கக்கூடாது.

தொல்காப்பியம்

ஆய்தல் – உள்ளதன் நுணுக்கம்

திருக்குறள்

ஆராய்ச்சி, ஆய்தல், தேர்தல், நாடுதல்

---

திறனாய்வும் ஆராய்ச்சியும் வேறுவேறு என்றாலும் திறனாய்வு ஆராய்ச்சியாய் வளர்வதும் உண்டு.

# இலக்கியத் திறனாய்வு - வரையறை

பிரெஞ்சு மொழிக் கலைக்களஞ்சியம்

- மதிப்பிடுவது
- தீர்ப்பளிப்பது
- படைப்பை விளக்குவது

(மதிப்பிடுவது, தீர்ப்பளிப்பது) — ஆக்ஸ்போர்டு அகரமுதலி, உலக இலக்கிய அகரமுதலி

1. தீர்ப்பளிக்கும் திறனாய்வாளர் தன்னை முதன்மைப்படுத்துகிறார்
2. பகுத்தாயும் திறனாய்வாளர் படைப்பை முதன்மைப்படுத்துகிறார்.

## வரையறை

ஓர் இலக்கிய ஆக்கத்தைப் பகுத்தாராய்வதும் விளக்குவதும் மதிப்பிடுவதும் தீர்ப்புக் கூறுவதும் ஆகிய அனைத்துச் செயற்பாடுகளும் இலக்கியத் திறனாய்வே ஆகும். இது தவிர்க்கமுடியாதபடியான ஒரு தளத்தில் இயங்கும் செயற்பாடாகும். – க. பஞ்சாங்கம்

# திறனாய்வு வகைகள்

திறனாயும் முறையின் அடிப்படையில்
பல திறனாய்வு வகைகள் சுட்டப்படுகின்றன.

1. பகுப்புமுறைத் திறனாய்வு
2. விதிமுறைத் திறனாய்வு
3. மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு
4. வரலாற்றுமுறைத் திறனாய்வு
5. ஒப்பியல்முறைத் திறனாய்வு
6. பாராட்டுமுறைத் திறனாய்வு
7. விளக்கமுறைத் திறனாய்வு
8. மனப்பதிவுமுறைத் திறனாய்வு

# திறனாய்வு வகைகள்

பிறதுறை அறிவைப் பயன்படுத்திச் செய்யும்
திறனாய்வு முறைகள்

1. உளவியல் திறனாய்வு
2. சமூகவியல் திறனாய்வு
3. அறிவியல் திறனாய்வு
4. தொன்மவியல் திறனாய்வு
5. மொழியியல் திறனாய்வு
6. குறியியல் திறனாய்வு

# திறனாய்வு வகைகள்

அவ்வக்கால இலக்கிய இயக்கங்களுக்கு ஏற்பப் பெயர்பெறும் திறனாய்வு முறைகள்

1. செவ்வியல் திறனாய்வு
2. புதிய செவ்வியல் திறனாய்வு
3. புனைவியல் திறனாய்வு
4. புதுத்திறனாய்வு
5. நடப்பியல் திறனாய்வு
6. மார்க்சியத் திறனாய்வு
7. இருப்பியல் திறனாய்வு
8. நிகழ்ச்சிவாதத் திறனாய்வு
9. அமைப்பியல் திறனாய்வு
10. ஏற்புநிலைத் திறனாய்வு
11. பெண்ணிலைவாதத் திறனாய்வு

# திறனாய்வு வகைகள்

எந்தவொரு திறனாய்வாளனும் இவற்றுள் ஏதாவது ஒரு வகையை மட்டும் கைக்கொண்டு வெற்றிபெற்றுவிட முடியாது. அவ்வகையான முயற்சி, இலக்கியமெனும் குவிமையத்திலிருந்து அவனைப் பிரித்து வேறொரு இயலுக்கு அடிமையாக்கிவிடும்.

– நார்த்ராப் ப்ரை

அகவயத் திறனாய்வு (Intrinsic)

இலக்கியத்தன்மைகளை விளக்கும் திறனாய்வு

புறவயத் திறனாய்வு (Extrinsic)

இலக்கிய ம் உருவாக்கும் முறையை விளக்கும் திறனாய்வு.

# திறனாய்வும் தேவையும்

1. மனிதனுக்கான தனி அடையாளத்தை, அவனிடம் இருக்கும் திறனாயும் தரத்தை வைத்தே கண்டுகொள்ளலாம்.
2. மற்ற கலைகள் எல்லாம் ஊமையாக்க் கிடக்கும்போது, திறனாய்வியல் ஒன்றுதான் வாய் திறந்து பேசுகிறது – நார்த்ராப் ப்ரை
3. பன்முகப்பட்ட திறனாய்வுச் சிந்தனைகளுக்கு நடுவில்தான் இலக்கியமும் மேலான நிலையில் விளங்க முடியும்.
4. இலக்கியம், திறனாய்வு என்பவை வாழ்க்கையைப் பற்றியவை என்பதால் வாழ்கின்ற அனைவரோடும் நேரடித் தொடர்பு உடையன.

# திறனாய்வும் தேவையும்

மனிதனின் இரண்டு வகையான உலகங்கள்

1. பொருட்களால் ஆன அவனது இயற்கை உலகம்.
2. கற்பனை, ஆசை, நம்பிக்கை ஆகியவற்றாலான புனைவு உலகம்.

கலைஞனால் உருவாக்கப்படும் புனைவுலகத்திற்குள் முழுமையாக வாழ்வதற்குத் திறனாய்வுச் செயல்பாடுகள் பெரிதும் பயன்படும்.

படைப்பைப் போலவே திறனாய்வும் இன்றியமையாத்து.

# இலக்கியத் திறனாய்வு

## அலகு 1: திறனாய்வுப்பணி, கலைச்சொல்லாக்கம்

முனைவர் மோ. செந்தில்குமார்
தமிழ்த்துறை
14.08.2020

# திறனாய்வுப் பணியின் கடுமை

ஒருவர் தன்னைத் திறனாய்வாளராக நிறுவிக்கொள்ளுதல் என்பது, மதிப்புகளைக் கணித்துத் தீர்ப்புக் கூறும் நீதிபதியாகத் தன்னை உருவாக்கிக்கொள்ளுதல் ஆகும். - ஐ.ஏ. ரிச்சர்டு

தகுதிப்படுத்திக்கொள்ளக் கடுமையாக உழைக்க வேண்டும். எழுத்தாளர்கள், படைப்பவனை உறிஞ்சிப் பிழைக்கிற ஒட்டுண்ணிகள் என்று கூறுவதையும் ஏற்கவேண்டும்.

திறனாய்வுப்பணி எதிர்ப்புகளையும் ஏச்சுகளையும் பெற்றுத்தரக்கூடியது. எதையும் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். - வல்லிக்கண்ணன்

படைப்பாளர் பார்வையில் திறனாய்வாளர்

1. குற்றமே காண்பவர்
2. இழித்துப் பேசும் போக்குடையவர்

# திறனாய்வுப் பணியின் கடுமை

திறனாய்வாளரைச் சாம்பலாக்கிய புராணம் தமிழில் உண்டு.

என்னை நானே
சிதையில் ஏற்றி
எருவிட்டு மூடி
மூணுதரம் சுற்றிவந்து
நெருப்பு மூட்டி
எரித்துப் பார்த்து
முடித்தாச்சு
போடா போ! உன்
நமத்துப் போன
தீக்குச்சிகளை
வெயிலில் காயப்போடு

- சிற்பி

வேலைக்காரியைக் குறை
சொல்லி
மாமியார் அவல் இடிக்க
உமி ஊதி ருசி பார்த்து
ருசி பார்த்து உமி ஊதி
எஞ்சியது
உரலும் உலக்கையுமே

- குமரித்துறைவன்

# திறனாய்வுப் பணியின் கடுமை



நல்ல திறனாய்வாளன், எந்த இடத்தில் கவிஞன் கைகழுவி விடப்பட்டானோ, அந்த இடத்தில் நின்று கவிதையைத் தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறான்.

– நார்த்த்ராப் ப்ரை

படைப்பவன், படைப்பிலிருந்து விடுதலை பெற்ற உணர்வோடு விளங்கவேண்டும். தன் எழுத்து, தன் படைப்பு என்று உரிமை கொண்டாட உண்மையான இலக்கிய உலகில் இடமில்லை.

- தாகூர்



# திறனாய்வும் கலைச்சொல்லாக்கமும்

சுதந்திரப் போராட்ட காலத்தில்

சுப்பிரமணியசிவா, பாரதியார், மறைமலையடிகள் – கலைச்சொல்லாக்கம் குறித்த விழிப்புணர்வை வலியுறுத்தினர்.

சிவா, தன் 'ஞானபானு' இதழில், "உங்கள் நா தமிழே பேசுக; நீங்கள் கையிலேந்தும் இறகு தமிழே எழுதுக; உங்களுக்குடைய ஹிருதயம் தமிழையே நாடுக." என்றார்.

பாரதியார்: சிலேட்டு – பலகை பென்சில் - குச்சி

---

செந்தமிழ்ச் செல்வி இதழில் – Novel - பொருந்தாக் கலைச்சொற்கள்: நாவல், கற்பிதக் கதை, கற்பனா சரிதை, நவீனம், புதுக்கதை (மறைமலையடிகள்)

புதினம் என்று ஏன் சொல்லக்கூடாது? - மதிமன்னன்

# திறனாய்வும் கலைச்சொல்லாக்கமும்

**கலைச்சொல்லாக்கத்தில் நம் வரலாற்றுப் படிப்பினை**

தொல்காப்பியம் : 1. வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே, 2. மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்.

நன்னூல் : வடமொழியாக்கம் – ஓர் இயலையே படைத்தளித்தது

கம்பர் : வடமொழிச் சொற்கள், பெயர்கள், தொடர்களை மிக நேர்த்தியாகத் தமிழ்ப்படுத்தினார்.

---

தமிழ் கலை இலக்கிய உலகம்  மொழி பற்றிய சரியான
அறிவியல் பார்வை இன்றிச் செயல்பட்டமையே
இன்றைய திறனாய்வு வளர்ச்சி இன்மைக்குக் காரணம்.

- க. பஞ்சாங்கம்

# திறனாய்வும் கலைச்சொல்லாக்கமும்

**தொடக்ககாலத் தமிழ்த் திறனாய்வாளர்கள்**

க. நா. சுப்பிரமணியம் : Realism போன்ற சொற்களுக்குத் தமிழ்ச்சொல் தேடவேண்டியதில்லை என்றார்.

சி.சு. செல்லப்பா : சோஷியாலஜிகல் விமர்சகன், எமோஷனல் ரெஸ்பான்ஸ்

கு.ப.ரா.: Realism – பிரத்தியக்ஷ சித்திரம் (யதார்த்தவாதம்)

சி.சு. செல்லப்பா : Romanticism – அதிசயோக்தி தத்துவம் (புனைவியம்)

---

மூலமொழிச் சொல்லின் வரையறுக்கப்பட்ட பொருள் :

Reality : மெய்ப்பொருளியல் துறையில், அறிவியல் துறையில், அளவையியல், மதம், பழக்கவழக்கத்தில், இலக்கியத் திறனாய்வில் - வெவ்வேறு பொருளுடையதாக உள்ளது.

# திறனாய்வும் கலைச்சொல்லாக்கமும்

**கா. சிவத்தம்பி:** மொழியின் உள்ளார்ந்த ஆற்றல்களை அறிந்து சொல்லாக்கம் செய்யாது, எடுத்தவுடனேயே சொற்கடனில் இறங்குவதனால் நாம் எமது பாரம்பரியத்தையும் நவீனத்தையும் இணைக்க முடியாதவர்களாகவே இருப்போம்.

---

சில சொற்கள் தமிழில் பூரணமான அர்த்தத்தைக் கொடுக்குமோ என்பதுதான் சந்தேகம். வார்த்தையைச் சொல்லிச் சொல்லிப் பழக்கித்தான் மெருகையும் பொருளையும் அதற்கு ஏற்ற முடியும். – வ.ரா.

தாய்மொழி பற்றிய பார்வை, ஆர்வம் இன்மையால் மொழியாக்கத் தவறுகள் தொடர்கின்றன.

↔

பிறமொழி வளம் இன்மையாலும் மொழியாக்கத் தவறுகள் தொடர்கின்றன.

# திறனாய்வும் கலைச்சொல்லாக்கமும்

## தமிழ்த் திறனாய்வியலில் பெருகிக் கிடக்கும் குழப்பம்

Plot:

1. சூழ்ச்சி அல்லது சதி – அ.ச. ஞானசம்பந்தன்.
2. மு. வரதராசனார் – கரு என்கிறார் – Theme, Plot வேறுபாடு அறியாது.
3. கதைக்கரு, கதைப்புலம், கதைக்கோப்பு, கதைத்திட்டம், கதை நிகழ்ச்சி இப்படிப் பல சொற்கள். நிலவுகின்றன. (கதை நிகழ்ச்சிக்கூறு)

Fine Arts – நுண்கலை (மு.வ.) சஞ்சீவி – இன்கலை ??? (நுண்கலை சரி)

Symbol - குறியீடு Imagism – படிமம் (Symbolism - குறியீட்டுவாதம்)

தமிழண்ண, சச்சிதானந்தம் – Symbol – படிமம், Imagism – உருக்கவிதை அல்லது உருக்காட்சி